# ஆயர் கடிதம்

Ref No: GR/11/2013

ஈசோ மெசிகாவில் அன்பிற்குரிய அருட்தந்தையர்களே, அருட் சகோதரிகளே, சகோதரர் சகோதரிகளே, நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவர் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் சமாதானமும் உரித்தாகுக!

நமது திருச்சபை, ஜூலை 28 ஆம் தேதி அன்று புனித அல்போன்சம்மாவின் திருநாளை கொண்டாடுகிறது. இத்தருணத்தில், எல்லாருக்கும் எனது திருநாள் நல்வாழ்த்துக்களையும் ஜெபத்தையும் உரித்தாக்கிக்கொள்கிறேன். அத்தோடு, அல்போன்சம்மாவைக் குறித்தும் அவரது வாழ்கையிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? என்பதை பற்றியும் நாம் சிந்திப்பது உகந்த்து.

இந்தியாவின் முதல் புனிதை என்று அழைக்கப்படும் அவர், கேரளாவில் குடமாளூர் என்ற இடத்தில் 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ம் நாள் ஜோசப் - க்கும் மேரிக்கும் மகளாக பிறந்தார். குழந்தையை பெற்றோர்கள் அன்னக்குட்டி என்று செல்லமாக அழைத்தார்கள். அந்நாட்களில் புனிதர் பலரின் வரலாறுகளை பாட்டி அவளுக்கு சொல்லி கொடுத்தாள், இதனால் ஈர்க்கப்பட்ட அன்னக்குட்டியும் புனிதர் போல வாழ ஆசைப்பட்டாள்

அன்புள்ள பெற்றோர்களே! இறைவன் நம் ஒவ்வொருவரையும் அன்பு செய்கிறார் என்பதற்கு மிகப்பெரிய அடையாளம் அவர் நமக்கு தந்த பிள்ளைகள். அவர்களை பேணிக்காப்பதும், கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்ப்பதும் ஒவ்வொருவரின் கடமை. அதை எவ்வாறு செய்கிறோம் என்பதை சிந்திப்போம். அத்தோடு, திருச்சபையை அன்பு செய்து அதை சார்ந்த கருத்துக்களை பிள்ளைகளுக்கு புகட்ட மனம் வைக்கிறோமா எனவும் சிந்திக்க வேண்டிய காலமிது.

அன்னக்குட்டியின் அழகை கண்டு, பொன்னும் பொருளும் கொடுத்து அவளை திருமணம் செய்ய பலர் முன் வந்தனர். ஆனால், அவளோ கன்னியராக மாறி இறைஊழியம் செய்ய விரும்பினாள். அவளுக்கிருந்த அழவில்லா ஈடுபாட்டை உணர்ந்த குடும்பத்தார் துறவறம் மேற்கொள்ள அவளை அனுமதித்தனர் .

இன்று நம் திருச்சபையில், குறிப்பாக நமது மறை மாவட்டத்தில் இறை அழைத்தல் எவ்வாறு நடந்துகொண்டிருக்கிறது, அதற்கு நமது பெற்றோர்களின் பங்கு என்ன? பிள்ளைகளுக்கு அவர்களுடைய எதிர்காலத்தை பற்றி கூறும் பொது, நம்முடைய மறைமாவட்டத்தின் எதிர்காலத்தை பற்றி கூறுகிறோமா? இறை அழைத்தலை நாம் ஊக்குவிக்கிறோமா? இன்னும் சிலர், பிள்ளைகளின் உணர்வை மதிக்காமல் இறை அழைத்தலுக்கும் துறவற வாழ்க்கைக்கும் தடையாக இருக்கின்றனர் என்பதைப்பற்றியெல்லாம் நாம் இத்தருணத்தில் நினைத்து பார்க்க வேண்டும் .

இவ்வாறு 1927 ம் ஆண்டு மே மாதம் 27ம் நாள் பரணங்கானம் பிரான்சிஸ்கன் கிளாரிஸ்ட் சபையில் சேர்ந்த அவர், தன்னுடைய துறவற வாழ்க்கையை இறைவனுக்கு உகந்ததாக மாற்றுவதர்க்கு தன்னை ஆயத்தப்படுத்தி, ஆதற்கான எல்ல முயற்சிகளையும் மேற்கொண்டார். இறைவனை அன்பு செய்யவேண்டியது நோயினாலும் துன்பத்தாலும்தான், இதுவே இறை சித்தம் என உணர்ந்து, அவ்வாறு புண்ணியம் நிறைந்ததான வாழ்வு நடத்த எல்லா தியாகத்தையும் அல்போன்சா ஏற்றுக்கொண்டாள். இரத்த வாந்தி போன்ற கொடிய

நோய் கடுமையாக தாக்கியபோதும், தனது துன்பங்களை பொறுமையுடனும் தாழ்மையுடனும் எற்றுக்கொண்டு 1946 ஜூலை 27 ம் நாள் வேதனையின் மத்தியில் அல்போன்சா இறைவனில் தன்னை இணைத்துக்கொண்டாள்.

அல்போன்சாவிடம் ஏறெடுக்கப்படும் மன்றாட்டினால் பல்வேறு புதுமைகள் நடைபெற்றுக்கொண்டிருந்ததோடு, அவை ஆராய்ந்து நிருபிக்கப்பட்டதால் 1986 ம் ஆண்டு பெப்ரவரி 8 ம் தியதி போப் ஜாண்பால் அல்போன்சாவிற்கு முத்திப்பேறு பட்டம் வழங்க, 2008 அக்டோபர் 12 ம் நாள் புனிதராக போப் பதினாறாம் பெனடிக்ட் அறிவித்தார்

நமது மறை மாவட்டத்தை சார்ந்த நாகர்கோயிலில் அமைந்துள்ள புனித அல்போன்சா ஆலயம் 2008 ஆம் ஆண்டு திருத்தலமாக உயர்த்தப்பட்டதை அனைவரும் அறிந்ததே. தமிழகத்தில் புனித அல்போன்சாவின் பெயரிலுள்ள முதல் திருத்தல ஆலயம் இதுவே. இவ்வாலய திருவிழாவினை கடந்த நான்கு ஆண்டுகளாக மறைமாவட்டம் ஒட்டுமொத்தமாக கொண்டாடுகிறது. திருத்தலமானதால் ஏராளமான மக்கள் புனித அல்போன்சம்மாவின் பரிந்துரையை நாடி இறை அசீர் பெறுகின்றனர். இத்திருத்தலத் திருவிழா ஜூலை 19 முதல் 28 தியதி வரை நடைபெறும். இத்திருவிழாவோடு இணைந்து இளைஞர்கள் நடத்தும் நடைப்பயணம் 27ம் தேதி நடைபெறுவதால், அதன் முன்தயாரிப்பாக புனித அல்போன்சம்மாவின் நவநாள் 26 ம் தியதி முடிவடைவது போன்று எல்லா ஆலயங்களிலும் நடத்தி, அதற்கான ஆன்ம ஆயத்தம் செய்ய வேண்டும். இந்தமுறை மூன்று இடங்களிலிருந்து அதாவது படந்தாலுமூடு, தக்கலை மற்றும் தூசைபுரம் போன்ற இடங்களிலிருந்து திருபயணம் தொடங்கும். இளைஞர்கள் அனைவரும் இந்த விசுவாச திருப்பயணத்தில் கலந்துகொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடைசிநாள் அதாவது 28 ம் தியதி மறைமாவட்ட மக்கள் அனைவரும் திருத்தலம் நோக்கி திருப்பயணம் மேற்கொள்கின்ற நாள். ஒவ்வொரு பங்குமக்களும் இத்திருத்தலத்தை சந்தித்து புனித அல்போன்சம்மாவின் பரிந்துரையை நாடி இறையாசீர் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இறை ஆசிர் அனைவரிலும் தங்குக!

ஈசோவில் அன்புடன்

தக்கலை
13.07.2013

மார் ஜார்ஜ் ராஜேந்திரன்

ஆயர், தக்கலை மறைமாவட்டம்

---

இச்சுற்றுமடலை 2013 ஜூலை 21 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருப்பிலியின் இறுதியில் வாசிக்கவும். வழக்கமான மறையுரை வழங்கவும்.